தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சார்வரி, ஆவணி 29, திருவள்ளுவர் ஆண்டு–2051

2020 செப்டம்பர் 14, திங்கட்கிழமை

சென்னை–600 002, வாலாஜா சாலை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், கலைவாணர் அரங்கம், மூன்றாவது தளத்தில் உள்ள பல்வகை கூட்டரங்கத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“நெருநல் உளன்ஒருவன் இன்றுஇல்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.”

நேற்று இருந்த ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமையை உடையது இந்த உலகம். (குறுக்கீடு)

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு இரங்கல் தீர்மானம் மட்டும்தான். அனுமதியில்லை. (குறுக்கீடு) சரி, உட்காருங்கள்.*

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உளுப்பினர்கள் திரு. ஆர்.டி. கோபாலன், திரு. கு. லாரன்ஸ், திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. கே.என். இலட்சுமணன், திரு. மு. ஜான் வின்செண்ட், திரு. ஜி. காளன், திரு. எஸ்.ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன், திரு. பூ. கிருஷ்ணன், திரு. ஆர். சுந்தர்ராஜன், திரு. குழந்தை தமிழரசன், திரு. மு. அம்பிகாபதி, திருமதி எஸ். ராஜம்மாள், திரு. அ. அஸ்லம் பாஷா, திரு. பே. மாரி அய்யா, திரு. வ. பாலகிருஷ்ணன், திரு. ஓ.எஸ். வேலுச்சாமி, திரு. அ. இரகுமான்கான், திரு. வெ. சுப்பையா, திரு. கோ. நயினா முகம்மது. திரு. தொ.ப. சீனிவாசன், திரு. ரா. அய்யாசாமி, திரு. நா. சுண்முகம், திரு. கே. தங்கவேல் ஆகியோர் மறைவு

2020 செப்டம்பர் 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. ஆர்.டி. கோபாலன் அவர்கள் 26–4–2020 அன்றும், திரு. கு. லாரன்ஸ் அவர்கள் 8–5–2020 அன்றும், திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன் அவர்கள் 15–5–2020 அன்றும், திரு. கே.என். இலட்சுமணன் மற்றும் திரு. மு. ஜான் வின்சென்ட் ஆகியோர் 1–6–2020 அன்றும், திரு. ஜி. காளன் அவர்கள் 10–6–2020 அன்றும், திரு. எஸ்.ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் அவர்கள் 25–6–2020 அன்றும், திரு. பூ. கிருஷ்ணன் அவர்கள் 27–6–2020 அன்றும், திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் 7–7–2020 அன்றும், திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் 9–7–2020 அன்றும்,திரு. மு. அம்பிகாபதி அவர்கள் 14–7–2020 அன்றும், திருமதி எஸ்.ராஜம்மாள் அவர்கள் 19–7–2020 அன்றும், திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் 21–7–2020 அன்றும், திரு. பே. மாரி அய்யா அவர்கள் 27–7–2020 அன்றும், திரு. வ. பாலகிருஷ்ணன் அவர்கள் 8–8–2020 அன்றும், திரு. ஓ.எஸ். வேலுச்சாமி அவர்கள் 19–8–2020 அன்றும், திரு. அ. இரகுமான்கான் அவர்கள் 20–8–2020 அன்றும், திரு. வெ. சுப்பையா அவர்கள் 23–8–2020 அன்றும், திரு. கோ. நயினா முகம்மது அவர்கள் 25–8–2020 அன்றும், திரு. தொ.ப. சீனிவாசன் அவர்கள் 26–8–2020 அன்றும், திரு. ரா. அய்யாசாமி அவர்கள் 29–8–2020 அன்றும் திரு. நா. சண்முகம் அவர்கள் 4–9–2020 அன்றும் மற்றும் திரு. கே. தங்கவேல் அவர்கள் 13–9–2020 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. ஆர்.டி. கோபாலன் அவர்கள் 1980–1984 ஆம் ஆண்டுகளில் கம்பம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள். மேலும், 1986–1992 ஆம் ஆண்டுகளில் மாநிலங்களவை உறுப்பினராகவும் திறம்பட பணியாற்றியுள்ளார்கள்.

திரு. கு. லாரன்ஸ் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் பத்மநாபபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள். மேலும், 1993–1996 ஆம் ஆண்டுகளில் அமைச்சராகவும் சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள்.

2020 செப்டம்பர் 14]

திரு. ஜெமினி கே. ராமச்சந்திரன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் ஆரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே.என். இலட்சுமணன் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் மயிலாப்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. மு. ஜான் வின்சென்ட் அவர்கள் 1977–1980, 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் நாங்குநேரி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஜி. காளன் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் வில்லிவாக்கம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. எஸ்.ஆர். சுப்பிரமணிய ஆதித்தன் என்கிற சுப்பிரமணியன் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் திருச்செந்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறப்புறப் பணியாற்றினார்கள்.

திரு. பூ. கிருஷ்ணன் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் விழுப்புரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ஆர். சுந்தர்ராஜன் அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் மதுரை (மத்தி) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. குழந்தை தமிழரசன் அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் விருத்தாசலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திரு. மு. அம்பிகாபதி அவர்கள் 1977–1980 மற்றும் 1980–1984 ஆகிய ஆண்டுகளில் மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

2020 செப்டம்பர் 14]

திருமதி எஸ். ராஜம்மாள் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் தூத்துக்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் ஆம்பூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. பே. மாரி அய்யா அவர்கள் 1997–2001 ஆம் ஆண்டுகளில் புதுக்கோட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. வ. பாலகிருஷ்ணன் அவர்கள் 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் சிவகாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நன்கு பணியாற்றினார்கள்.

திரு. ஓ.எஸ். வேலுச்சாமி அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் ஒட்டப்பிடாரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

திரு. அ. இரகுமான்கான் அவர்கள் 1977–1980, 1980–1984 மற்றும் 1985–1988 ஆகிய ஆண்டுகளில் சேப்பாக்கம் தொகுதியிலிருந்தும், 1989–1991 ஆம் ஆண்டுகளில் பூங்கா நகர் தொகுதியிலிருந்தும் மற்றும் 1996–2001 ஆம் ஆண்டுகளில் இராமநாதபுரம் தொகுதியிலிருந்தும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள். மேலும், 1996–2001 ஆம் ஆண்டுகளில் தொழிலாளர் நலத் துறை அமைச்சராகவும் சிறப்பாகப் பணியாற்றியுள்ளார்கள்.

திரு. வெ. சுப்பையா அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் திருமயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கோ. நயினா முகம்மது அவர்கள் 1996–2001 ஆம் ஆண்டுகளில் கடையநல்லூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, செவ்வனே பணியாற்றினார்கள்.

2020 செப்டம்பர் 14]

திரு. தொ.ப. சீனிவாசன் அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் போளூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. ரா. அய்யாசாமி அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் தாராபுரம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, திறம்பட பணியாற்றினார்கள்.

திரு. நா. சண்முகம் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் சோளிங்கர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. கே. தங்கவேல் அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் திருப்பூர் (தெற்கு) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, நல்ல முறையில் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

முற்பகல் 10–10

2. இரங்கல் தீர்மானங்கள்

(அ) திரு. பிரணாப் முகர்ஜி, இந்திய முன்னாள் குடியரசுத் தலைவர் அவர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *“இந்திய முன்னாள் குடியரசுத் தலைவரும், மூத்த அரசியல்வாதியுமான திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் உடல் நலக் குறைவால் 31–8–2020 அன்று தனது 84–வது அகவையில் மறைவுற்ற செய்தியறிந்து இப்பேரவை அதிர்ச்சியும் ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.*